admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066

கனி பிரிண்டிங்

DTP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

நாளிதழ் மற்றும் மேகஸின் குறைந்த விலையில் பிரிண்டிங் செய்து தரப்படும்

தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 | இதழ்:210 | 4 பக்கங்கள் | 06:06:2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருடசந்தா ரூ.1825




இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

**விளக்கம்:**

சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கெடுதல், நிலத்தெறிந்தவன்கை தப்பாமற் பட்டதுபோலும், இது பொருட்கேடு வருமென்றது.

## “கர்நாடக அரசு மீது மக்களின் அதிருப்தி அதிகரித்ததே முதல்வர் மாற்றத்துக்கு காரணம்” - பிரதமர் மோடி



சூரத்: கர்நாடக காங்கிரஸ் ஆட்சி மீது மக்களுக்கு அதிருப்தி அதிகரித்ததன் காரணமாகவே அம்மாநிலத்தில் முதல்வர் மாற்றப்பட்டுள்ளதாக பிரதமர் மோடி விமர்சித்துள்ளார்.குஜராத்தின் சூரத் நகரில் ரூ.18,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் மோடி, “கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசு மீது மக்களுக்கு மிகுந்த கோபம் உள்ளது. அதனால்தான் முதல்வரை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மற்ற மாநிலங்களிலும் வாக்காளர்களின் கடும் அதிருப்தியை அக்கட்சி எதிர்கொண்டு வருகிறது. இமாச்சலப் பிரதேசத்தில் சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும், ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களில் நடந்த தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி பின்னடைவைச் சந்தித்தது. அக்கட்சியின் ஆட்சி நிர்வாகம் குறித்து மக்கள் சலிப்படைந்து வருகிறார்கள்.சமீபத்தில் நடைபெற்ற மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி தேர்தல்களில் பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி மக்களிடம் இருந்து மிகப் பெரிய ஆதரவைப் பெற்றுள்ளன. நாடு முழுவதும் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களிலும் பாஜக வெற்றி பெற்று வருகிறது. ஒவ்வொரு தேர்தலும் ஒரே செய்தியைத்தான் உணர்த்துகின்றன. குழப்பம், நிச்சயமற்ற தன்மை, விரக்தி ஆகியவற்றை நாடு விரும்பவில்லை.தற்போது உலக அளவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, எரிசக்தித் துறையில் தன்னிறைவு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்துகிறது. கடந்த 12 ஆண்டுகளில் நாடு கட்டமைத்துள்ள திறன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது.நாட்டின் வளர்ச்சியை முன்னுரிமையாகக் கொண்டு எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. அதனால்தான் பாஜக மீதும் அதன் வளர்ச்சித் திட்டங்கள் மீதும் நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதானால்தான் மக்கள் மீண்டும் மீண்டும் பாஜகவுக்கு தங்கள் ஆதரவை வழங்கி வருகிறார்கள்” என்று பிரதமர் மோடி பேசினார்.

## பிஹார் மருத்துவமனை தீ விபத்தில் 5 பேர் உயிரிழப்பு



முசாபர்பூர்:
பிஹாரில் ஒரு தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.பிஹாரின் முசாபர்பூர் மாவட்டம், பிரம்மபுரா பகுதியில் பிரசாத் மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தீப்பற்றியது. தீ வேகமாகப் பரவியதுடன் அறை முழுவதும் அடர்ந்த புகையும் நிறைந்தது.இந்நிலையில் இந்த தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயம் அடைந்தனர். இவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.முசாபர்பூர் மாநகராட்சி ஆணையர் ரிதுராஜ் சிங் கூறுகையில், “மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கருதுகிறோம். என்றாலும் விரிவான விசாரணைக்குப் பின்னரே துல்லியமான காரணம் தெரியவரும். தீ விபத்து குறித்து விசாரணை நடத்த 5 பேர் கொண்ட குழுவை மாவட்ட ஆட்சியர் அமைத்துள்ளார்” என்றார். பிஹார் முதல்வர் சாம்ராட் சௌத்ரி ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்ட பதிவில், “இந்த விபத்து மிகுந்த துயரம் அளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக தலா ரூ.4 லட்சம் நிதியுதவி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க போதிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன” என்று கூறியுள்ளார்.துணை முதல்வர் விஜய் குமார் சவுத்ரி, பாஜக தேசிய தலைவர் நிதின் நவீன், முன்னாள் முதல்வர் நிதிஷ் குமார் உள்ளிட்ட தலைவர்களும் விபத்து குறித்த மிகுந்த வேதனை தெரிவித்துள்ளனர்.




# 131-வது பிறந்தநாள் கொண்டாட்டம்: காயிதே மில்லத் நினைவிடத்தில் முதல்வர் மரியாதை




சென்னை:
சென்னை காயிதே மில்லத் 131-வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை திருவல்லிக்கேணியில்உள்ள அவரது நினைவிடத்தில் முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.காயிதே மில்லத் 131-வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னை திருவல்லிக்கேணி வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் உள்ள காயிதே மில்லத் நினைவிடத்தில் தமிழக அரசு சார்பில் முதல்வர் விஜய் மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், அமைச்சர்கள் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கேரள தொழில் துறை அமைச்சர் பி.கே.குன்ஞாலி குட்டி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர்காதர்மொகிதீன்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மற்றும் திமுக நிர்வாகிகள் காயிதே மில்லத் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், கோகுல இந்திரா, எஸ். அப்துல் ரஹீம், ரமணா.தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, அமமுக துணை பொதுச் செயலாளர் ஜி.செந்தமிழன், விசிக தலைவர் திருமாவளவன், தேமுதிக தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி உள்ளிட்டோரும் மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர். திமுக - காங்கிரஸ் மோதல்காயிதே மில்லத் நினைவிடத்தில் முதல்வர் விஜய் மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்த நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனால், அங்கு ஏராளமான திமுகவினர் திரண்டிருந்தனர்.ஸ்டாலின் வருவதற்கு முன்னதாக, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தனது ஆதரவாளர்களுடன் நினைவிடத்துக்கு வந்தார். அப்போது அங்கிருந்த திமுகவினர், ‘எங்கள் தலைவர் மரியாதை செலுத்திய பிறகுதான் மற்ற தலைவர்கள் உள்ளே செல்ல வேண்டும்’ என கூறி, செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் கட்சியினரை உள்ளே விட மறுத்து தடுத்தனர்.இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் ஆவேசமடைந்த திமுகவினர், ‘எங்கள் கூட்டணியில் இருந்து வெற்றி பெற்றுவிட்டு, இப்போது துரோகம் செய்கிறீர்கள்’ என்று காங்கிரஸ் கட்சியினரை நோக்கி முழக்கமிட்டனர். இதையடுத்து, இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு பதற்றமான சூழல் நிலவிய போதிலும், செல்வப்பெருந்தகை அமைதியாகக் காத்திருந்தார். மு.க.ஸ்டாலின் வந்து மரியாதை செலுத்தி சென்ற பிறகு, செல்வப்பெருந்தகை தனது ஆதரவாளர்களுடன் காயிதே மில்லத் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## உலகச் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மெரினா கடற்கரையில் தூய்மைப் பணி




சென்னை, 06,ஜூன்
உலகச் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரியாளையா குழந்தைகள் இல்லம் சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் தூய்மைப் பணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டி-6 காவல் நிலைய காவல் அதிகாரி ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், மரியாளையா இல்லத்தின் இயக்குநர் அருள் சகோதரி விக்டோரியா தலைமையில் மகளிர் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் அருள் சகோதரிகள் கலந்து கொண்டு கடற்கரையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து, பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி நாடகம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

## ‘மக்கள் மேடை’ - புதிய இயக்கம் தொடங்கினார் லதா ரஜினிகாந்த்



சென்னை:
‘மக்கள் மேடை’ எனும் புதிய இயக்கத்தை தொடங்குவதாக நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா அறிவித்துள்ளார். மாநிலத்துக்கு சேவை செய்ய விரும்பும் அனைத்து தரப்பு மக்களும் எங்களோடு கைகோர்க்கலாம் என அழைப்பும் விடுத்துள்ளார்.சமூக மற்றும் கலாச்சார தளங்களில் தொடர்ச்சியாக இயங்கி வரும் லதா ரஜினிகாந்த், ‘மக்கள் மேடை’ என்ற புதிய மக்கள் இயக்கத்தை நேற்று தொடங்கியுள்ளார். ‘மக்கள் மேடை - இது மக்களின் இயக்கம்’ என்ற முழக்கத்துடன், தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், நன்மைகளுக்காகவும் ஒன்றிணைவோம் என்ற நோக்கத்துடன் இந்தத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலியில் கூறியிருப்பதாவது: ‘மக்கள் மேடை’ என்ற எங்களது இயக்கத்துடன் சேர்ந்து இந்த மாநிலத்துக்காக சேவை செய்ய நினைக்கும் அனைவரும் ஒன்றாக சேரலாம். ஒன்றாக சேர்ந்து, ஒரு பெரும் மக்கள் சேவையாக, மக்கள் சக்தி யாக உருவாகி இந்த மாநிலத்துக்கு பல நன்மைகளை செய்ய முன்வாருங்கள். ஒன்றாக சேர்வோம், ஆக்கபூர்வமான காரியங்களை செய்வோம்.இந்த மக்கள் மேடை இயக்கத்தில் மூத்த குடிமக்கள், குடிமைப்பணி அதிகாரிகள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள், ராணுவத்தினர் என யாராக இருந்தாலும் உங்களின் அனுபவங்களை எங்களுக்கு கொடுக்கலாம். எங்களுடன் தொடர்பு கொண்டு, தமிழகத்துக்காகவும், அந்தந்த தொகுதிக்காகவும் நீங்கள் வேலை செய்யலாம். மாநிலத்துக்காக வேலை செய்யும் உள்ளூர் தலைவர்களை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம். மாநிலத்துக்கு தேவையான யோசனைகளை தந்து சேவையாற்ற விரும்பும் அனைத்து தரப்பு மக்களும் எங்களோடு கைக்கோர்க்கலாம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## தமிழ்நாட்டின் முதல்வர் விஜய்’யின் பெருந்தன்மை மற்றும் கருணையால் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது..



தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த முன்னாள் அமைச்சர் சிவி சண்முகம் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில், வரும் ஜூன் 18ஆம் தேதி மாநிலங்களவை தேர்தலுக்கான இடைத்தேர்தல் நடத்தப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்த சூழலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மாநிலங்களவைக்கான இடம் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, தவெக ஆதரவுடன் மாநிலங்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியை சார்ந்த பிரவீன் சக்கரவர்த்தி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டது. தமிழகத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராக காங்கிரஸ் கட்சியின் பிரவீன் சக்கரவர்த்தி தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டதுஇந்த நிலையில் மாநிலங்களவைக்கான இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் பிரவீன் சக்கரவர்த்தி சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் முன்னிலையில் பிரவீன் சக்கரவர்த்தி தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்களின்போது, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நிதியமைச்சருமான பா.சிதம்பரம், மூத்த தலைவர் தங்கபாலு காங்கிரஸ் கட்சியை சார்ந்த அமைச்சர்கள் பலர் உடன் இருந்தனர். வேட்புமனு தாக்களுக்கு பிறகாக பிரவீன் சக்கரவர்த்தி செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்போது அவர் பேசியதாவது ராஜ்யசபா இடைத்தேர்தலுக்கு வேட்பாளராக இன்று நான் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளேன். தமிழ்நாட்டின் முதல்வர் விஜய்’யின் பெருந்தன்மை மற்றும் கருணையாலும், எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இதை மிகப்பெரிய பொறுப்பாக நான் நினைக்கிறேன். பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதற்காக எனது குரல் ஓங்கும். காங்கிரஸ் தமிழக வெற்றி கழகம் கூட்டணி ஆட்சியின் செயல்பாடுகளை எல்லாம் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லவும் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லவும் நான் பாடுபடுவேன்.

## காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டத்தில் மாற்றம்: உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்



சென்னை:
டாஸ்மாக் கடைகளில் காலி மதுபாட்டில்களை திரும்பப்பெறும் திட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. மலைப் பிரதேசங்களுக்கு சுற்றுலா செல்பவர்கள், ஆங்காங்கே பிளாஸ்டிக் பாட்டில்களையும், மது பாட்டில்களையும் தூக்கி வீசுவதால் வன உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது. இதை தடுக்கும் விதமாக, மலைப்பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில், மது பாட்டில்களை கூடுதலாக 10 ரூபாய்க்கு விற்பனை செய்து, காலி பாட்டில்களை திரும்ப தரும் பட்சத்தில், 10 ரூபாயை திருப்பி தரும் வகையிலான திட்டத்தை அமல்படுத்தும்படி, சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரித்து வரும் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி. பரத சக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வு உத்தரவிட்டிருந்தது.இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், தமிழகத்தில் மூன்று மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த திட்டத்தை முழுமையாக மாற்றியமைக்க இருப்பதாகவும், காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் பணியில் டாஸ்மாக் ஊழியர்களை ஈடுபடுத்தாமல் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்படும் எனவும் குறிப்பிட்டார். அப்போது நீதிபதிகள், காலி பாட்டில்களை திரும்பப் பெறும் வகையில் பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வசூலிக்கும்போது, அதை ரசீதில் குறிப்பிட வேண்டும் என்றும், 10 ரூபாய் கூடுதலாய் வசூலிப்பது என்பது வாடிக்கையாளர்களிடம் அதிக கட்டணத்தை வசூலிப்பதற்கான உரிமமாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் தெரிவித்தனர்.இதற்கு பதிலளித்த தலைமை வழக்கறிஞர், இந்த அரசு ஊழலை ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்று விளக்கம் அளித்தார்.இதையடுத்து, காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டத்தை மாற்றியமைப்பது தொடர்பாக 8 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும், மாற்றியமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து 4 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கை நீதிபதிகள் வழக்கை ஜூலை 10-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிய உணவு திட்டத்தை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்


திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உடையாமுத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் இரகுபதியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிய உணவு திட்டத்தை, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜி. ரவிக்குமார், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவின் தரம், சுகாதார நடைமுறைகள் மற்றும் உணவு வழங்கும் முறை குறித்து ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்





# வெங்கடேஸ்வபுரத்தில் கலைஞரின் பிறந்தநாள் விழா



தென்காசி

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே உள்ள வெங்கடேஸ்வபுரம் கிராமத்தில், தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சரும் முத்தமிழறிஞருமான கலைஞர் மு. கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேற்கு ஒன்றிய செயலாளர் சமுத்திர பாண்டி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி ஆர். ராஜா, மாவட்ட விளையாட்டு அணி நிர்வாகி அய்யம்பெருமாள், வழக்கறிஞர் சார்லஸ், இளைஞர் அணி நிர்வாகி அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கிளைச் செயலாளர் செல்லத்துரை, பிரபு, மாரீஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் இசக்கி, ஜெயராஜ், முருகேசன், கஜேந்திரன், கணேசன், கிப்சன், அப்பாத்துரை, முருகன், எஸ். அம்மாசி உள்ளிட்டோர் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் கலைஞரின் அரசியல், இலக்கிய மற்றும் சமூகப் பணிகள் நினைவுகூரப்பட்டதுடன், அவரது கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல உறுதிமொழி ஏற்கப்பட்டது. விழாவில் கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் போதை மாத்திரை போதை மருந்து விற்பனை செய்த அண்ணன்தம்பி உட்பட 3 பேர் கைது

திண்டுக்கல்

திண்டுக்கல் நகர் பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் போதை மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக S.P.பிரதீப் அவர்களுக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து நகர் DSP.கார்த்திக் தலைமையில் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் பாலமுருகன் சார்பு ஆய்வாளர்கள் ஜான்சன், பிரபாகரன் மற்றும் காவலர்கள் நகர் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போது பாறைப்பட்டி சுடுகாடு பகுதியில் பதுங்கி இருந்து போதை மருந்து மற்றும் மாத்திரைகள் விற்பனை செய்த பேகம்பூர், யூசுபியா நகரை சேர்ந்த லத்தீப்மௌலானா(26), மேட்டுப்பட்டியை சேர்ந்த அண்ணன் முகமதுஅலி ஜின்னா(32) தம்பி முகமதுமைதீன்(27) அவர்களிடமிருந்து 12 பாட்டில்கள் போதை மருந்து, 25 போதை மாத்திரைகள், பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்








**கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே எடைக்கல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் விவசாய கிணற்றில் மோட்டார் வயர்களை திருடிய 4 பேர் கைது. இவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.**

# மணலூர்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரொக்க பணம் பறிமுதல்

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர் பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி சத்யராஜ் அவர்கள் தலைமையில் ஏழு பேர் கொண்ட காவல் துறையினர் அதிகாரிகள் நடத்திய அதிரடி சோதனையில் மூன்று ஆவண எழுத்தர் களியிடமிருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாகவும், தொடர்ந்து சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆவண பதிவாளர் உள்ளிட்டோரிடம் விசாரணை நடைபெற்றது. தமிழக முதல் நேற்று முன்தினம் இதே போல் லஞ்ச ஒழிப்புத்துறை அனைத்து சார் பதிவாளர்களிலும் சோதனை ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# உலக சுற்றுச்சூழல் தினம்: தென்காசியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்! பிளாஸ்டிக்கை ஒழிக்கவும் அழைப்பு

தென்காசி, ஜூன்

உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு தென்காசி மாவட்ட வனத்துறை சார்பில் இன்று (05.06.2026) மரம் நடும் விழா நடைபெற்றது. தென்காசி இரயில்வே பீடர் சாலையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா.ராஜ்மோகன், இ.வ.ப., முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு விழாவினைத் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: "ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இன்று தென்காசி இரயில்வே பீடர் சாலையில் வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் சுற்றுச்சூழல் தின நோக்கம் என்பது, ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் ஒழிப்பது மற்றும் மறுசுழற்சி முறைகளைப் பயன்படுத்துவது போன்ற தீர்வுகளை வலியுறுத்துவதாகும். எனவே, நமது சுற்றுச்சூழலை அரணாகப் பாதுகாக்கப் பொதுமக்கள் அனைவரும் தங்களால் இயன்ற அளவு பெருமளவில் மரக்கன்றுகளை நட்டு, இயற்கை வளத்தை மேம்படுத்த வேண்டும். மேலும், ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் என்ற நெகிழியினை ஒழிப்பதற்கு அனைவரும் வனத்துறையுடனும், மாவட்ட நிர்வாகத்துடனும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, தென்காசி மாவட்டத்தை முற்றிலும் சுகாதாரமான மற்றும் முன்மாதிரி மாவட்டமாக மாற்றிட பாடுபட வேண்டும்." இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் பேசினார். இவ்விழாவில் உதவி வனப் பாதுகாவலர் திரு.நெல்லை நாயகம், வனச்சரகர் திரு.செல்லத்துரை, வனவர்கள் திரு.சங்கர்ராஜா, திரு.பாரதி மற்றும் ஆகாஷ் ஐ.ஏ.எஸ் அகாடமி குழுவினர்கள் உட்படப் பொதுமக்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இருப்பு அறையில் காலாண்டு தணிக்கை ஆய்வு

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) வைக்கப்பட்டுள்ள மாவட்ட இருப்பு அறை மற்றும் கண்காணிப்பு அறை, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டு காலாண்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட தேர்தல் நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற இந்த ஆய்வு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. ரவிக்குமார் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப் பட்டது. ஆய்வின் போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக பராமரிக்கப் படுகிறதா, கண்காணிப்பு ஏற்பாடுகள் முறையாக செயல்படுகிறதா என்பன குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், இருப்பு அறையின் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் குறித்தும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்), தேர்தல் பிரிவு அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





## காட்பாடி வண்டரந்தாங்கள் ஊராட்சியில்

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது

காட்பாடி

காட்பாடி வண்டரந்தாங்கள் ஊராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், துப்புர பணியாளர்கள், ஊர் பொதுமக்கள், திருலாக கலந்து கொண்டனர் இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறுவேற்றப்பட்டன முடிவில் ஊராட்சி செயலாளர் நன்றி கூறினார்.






**ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அடுத்த வன்னி வேடு கிராமம் உலக சுற்றுச்சூழல் தின விழாவை முன்னிட்டு கிராமங்களில் கிராம சபா கூட்டங்கள் நடைபெற்றது இதில் வன்னி வேடு ஊராட்சி மன்றம் தலைவர் எஸ். கற்பக ராணி சக்திவேல் குமார் தலைமையில் நடைபெற்றது இதில் பற்றாளராக சண்முகம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தூய்மை இரு பால கவுன்சிலர்கள் சுகாதாரத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர் .**

# பசுமைக் குழுக்கள் (Eco-Clubs) மூலம் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் விழிப்புணர்வு





இராணிப்பேட்டை

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEF&CC) நாடு தழுவிய வழிகாட்டுதலின்படி, ராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் இன்று உலக சுற்றுச்சூழல் தினம் 2026 "பருவநிலை நடவடிக்கை" கருப்பொருளின் கீழ் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப் படுகிறது. இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் செயல்பட்டு வரும் பசுமைக் குழுக்கள் மூலம் பல்வேறு அர்த்தமுள்ள செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி ழி. பிரியா, இ.ஆ.ப. அவர்கள், பூட்டுத்தாக்கு அரசு மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கி வைத்தார் இப்பள்ளியின் பசுமைக் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் 100 குழுக்களாகப் பிரிந்து, பள்ளி வளாகம் முழுவதும் மரக்கன்றுகளை நட்டனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் ஒரு அடையாளமாக, மாணவர்கள் மரக்கன்றுகளுக்கு தங்களுக்குப் பிடித்தமான பெயர்கள் சூட்டப்பட்ட பலகைகளை ஏந்தியிருந்தனர். இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் திரு சிவகுமார் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி வி. மோகனா ஆகியோர் உடனிருந்தனர். பிரமாண்ட மரக்கன்றுகள் நடும் இயக்கம் இன்றைய கொண்டாட்டத்தின் முக்கிய அங்கமாக, சுற்றுச்சூழல் கல்வித் திட்டத்தின் (ணிணிறி கீழ் பதிவு செய்யப்பட்டு, தீவிரமாகச் செயல்படும் பசுமைக் குழுக்களைக் கொண்ட அனைத்துப் பள்ளிகளிலும் மாவட்ட அளவிலான பிரமாண்ட மரக்கன்றுகள் நடும் இயக்கம் நடைபெற்று வருகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து, மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்ற இடங்களைச் கண்டறிந்து, அந்தந்தப் பகுதிக்கு உகந்த நாட்டு ரக மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர் மாவட்ட வனத்துறை இதற்குத் தேவையான நாட்டு ரக மரக்கன்றுகளை இலவசமாக வழங்குவதோடு, அவற்றை நடுவது மற்றும் நீண்ட காலத்திற்குப் பராமரிப்பதற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலையும் வழங்கி வருகிறது. ஓவியம்/கட்டுரைப் போட்டிக இத்தினத்தின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாவட்டத்திலுள்ள பசுமைக் குழுக்கள் மூலம் மாணவர்களுக்குப் க்குப் பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்ட மற்றும் காடுகளின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புகளில் ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் மாணவர்களின் படைப் பாற்றலை ஊக்குவிப்பதோடு, அவசரத் தேவையான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த ஆழமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பள்ளி அளவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை பருவநிலை நடவடிக்கையின் அவசியத்தையும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தனிமனிதனின் கூட்டுப் பொறுப்பையும் வலியுறுத்துகின்றன. மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் (District Eco-coordinator) மற்றும் மாவட்டப் பசுமைத் தோழர் (District Greer) Fellow) ஆகியோர் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட வன அலுவலர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுடன் இணைந்து, மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் (ஜிணீறீஹ்ளீஉ) இத்திட்டத்தை சுமுகமாகவும் திறம்படவும் செயல்படுத்துவதை உறுதிசெய்ய தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டனர். ஆவணப்படுத்துதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல் பங்கேற்கும் அனைத்துப் பள்ளிகளும் தங்களின் மரக்கன்றுகள் நடும் செயல்பாடுகளை புவிக்குறியீடு (Geo-tagged) செய்யப்பட்ட உயர்தரப் புகைப் படங்களாக ஆவணப்படுத்தி நிகழ்வு நடைபெறும் அன்றைய தினமே சுற்றுச்சூழல் கல்வித் திட்ட (EEP) இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வருகின்றன. பள்ளியின் பெயர், யுடிஐஎஸ்இ (UDISE) குறியீடு) ஒன்றியம்/வட்டம், நடப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை, நடப்பட்ட இடம் மற்றும் புவி ஆயத்தொலைவுகள் (Geo-coordinates) உள்ளிட்ட தரவுகள் மாவட்டப் பசுமைத் தோழர் மூலம் ஒருங்கிணைக்கப் பட்டு, மேல் நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் (MoEF&CC) இத்திட்டம் தேசிய அளவில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் உள்ள பசுமைக் குழுப் பள்ளிகளின் இந்தத் தீவிரமான மற்றும் பரவலான பங்கேற்பானது, பசுமையான மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கி நிற்கும் திறன்மிக்க தமிழ்நாட்டை உருவாக்கு வதற்கான ஒரு அர்த்தமுள்ள பங்களிப்பாக அமைந்துள்ளது.

## உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு

# மாவட்ட ஆட்சித்தலைவர் மரக்கன்றுகளை நட்டு வைத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார்



அரியலூர்

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கரு.பொய்யூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், வனத்துறையின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு உலக சுற்றுச்சூழல் தின உறுதிமொழி ஏற்பு மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக பள்ளி மாணவ, மாணவி களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து அரியலூர் வனக்கோட்டம் சார்பில் பள்ளி மாணாக்கர்கள் கலந்து கொண்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் ந. மிருணாளினி கொடியசைத்து துவக்கி வைத்தார். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளிடையே ஏற்படுத்தும் வகையில் கரு.பொய்யூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுற்றுச்சூழல் தின உறுதிமொழியினை வாசிக்க மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். பின்னர், தமிழ்நாடு வனத்துறை, அரியலூர் வனக்கோட்டம் சார்பில் பள்ளி மாணவ, மாணவி யர்களிடையெ மரங்களின் மற்றும் இயற்கை வளத்தின் முக்கியத்துவம் மற்றும் இயற்கையை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் உலக சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சத்தலைவர் ந. மிருணாளினி கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் கரு.பொய்யூர் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், முழக்கமிட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்வில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகோபால், மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜராஜேஸ்வரி, அரியலூர் வட்டாட்சியர் தேவகி, இதர அரசு அலுவலர்கள், வனத்துறை அலுவலர்கள், பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அம்பை தீயணைப்பு படை நிலைய அலுவலகத்தில் வாங்க கற்றுக்கொள்வோம் தீ தடுப்பு பாதுகாப்பு பயிற்சி




நெல்லை

அம்பா சமுத்திரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்படை சார்பில் வாங்க கற்றுக்கொள்வோம் என்ற தலைப்பில் தீ தடுப்பு, பாதுகாப்பு அறிவோம், உயிர்களை காப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி, தீயணைப்பு நிலைய வளாகத்தில் நடைபெற உள்ளது. அம்பாசமுத்திரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்படை நிலையத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் வாங்க கற்றுக்கொள்வோம்' என்ற தலைப்பில் வருகின்ற ஜூன் 6,7 ம் தேதிகளில் வகுப்புகள் காலை 11:00 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல 5 மணி வரை இரண்டு நாட்கள் வகுப்புகள் நடைபெறுகிறது பொதுமக்கள், தன்னார்வலர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அம்பை தீயணைப்பு மற்றும் மீட்புப்படை நிலைய அலுவலர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சோழவரம் வடக்கு ஒன்றியம் விச்சூர் ஊராட்சியில் கலைஞர் பிறந்தநாள் விழா







திருவள்ளூர்

பொன்னேரி தொகுதி சோழவரம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட விச்சூர் ஊராட்சியில் கலைஞரின் 103 வது பிறந்த நாளை யொட்டி இனிப்புடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது விச்சூர் ஊராட்சி இந்த ஊராட்சிக்கு உட்பட்ட வெள்ளங்குளம் திமுக கிளை, மேட்டுமா நகர் திமுக கிளை, டாக்டர் அம்பேத்கர் நகர் திமுக கிளை கழக சார்பில் கழக கொடி ஏற்றி 500 நபர்களுக்கு இனிப்புடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சோழவரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன், தலைமை தாங்கினார். மாவட்ட பிரதிநிதி விச்சூர் சகாதேவன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கிளைக் கழக செயலாளர்கள் தட்சிணாமூர்த்தி, முனுசாமி, வேலாயுதம், ஹரி, மணி, நித்தியானந்தம், சந்திரன், குணசேகரன், நாகராஜ், ராஜன், இளைஞர் அணி சாந்த குமார், சீனிவாசன், யோகேஷ், பிரசாந்த், நாகலிங்கம், நாராயணன், கார்த்திக், கோபி குமார், கருணா, செல்வகுமார், லோகு, செல்வம், இளங்கோ, மிரீஸ்வரன், சிவா, பாக்கியராஜ், சிவமணி, வெங்கட்ராமன், கண்ணதாசன், சின்னையா, மற்றும் கழக உடன்பிறப்புகள் என பலர் கலந்து கொண்டனர்

## அழகர்நாயக்கன்பட்டி பகுதியில் கோவில் வரிப்பணத்தில்

# முறைகேடில் ஈடுபட்ட நபர்கள் தட்டிக்கேட்ட பெண்களை தரக்குறைவான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல்



பெரியகுளம்

அழகர்நாயக்கன்பட்டி பகுதியில் கோவில் வரிப்பணத்தில் முறைகேடில் ஈடுபட்ட நபர்கள் தட்டிக்கேட்ட பெண்களை தரக்குறைவான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விட்டுள்ளனர் இதனால் பாதிக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட பெண்கள் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முற்றுகையிட்டு ஆபாசமாக பேசிய பெண் உள்ளிட்ட 5 பேர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள அழகர்நாயக்கன்பட்டி ஊராட்சி பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில் உள்ளது இந்நிலையில் இக்கோவிலில் நிர்வாக கமிட்டி அமைக்கப்பட்டு அவர்கள் மூலம் கிராமத்தில் உள்ள அனைத்து குடும்பத்தினரிடம் ஆண்டுதோறும் வரி வசூல் செய்யப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாரியம்மன் கோவில் திருவிழா மெச்சையாக நடத்தி வருகின்றனர் இந்நிலையில் திருவிழா முடிந்த பிறகு வரி வசூல் செய்யப்பட்ட பணம் சந்தாவாக கிராமத்தில் உள்ள பொதுமக்களுக்கு பிரித்து வழங்குவதில் வழக்கமாக உள்ளனர் இந்த கோவில் வரிப்பணம் பிரித்து வழங்குவதில் முருகேசன், சுப்பிரமணி, சிகாமணி, ஆகியோர் பல ஆண்டுகளாக பல்வேறு முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக கடந்த மாதம் ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் ஊர் பொதுமக்கள் சார்பாக புகார் அளிக்கப்பட்டனர் ஆனால் ஜெயமங்களம் காவல்துறை யினர் கோவில் வரிப்பணத்தில் முறைகேடில் ஈடுபட்ட முருகேசன், சுப்பிரமணி, சிகாமணி, ஆகியோர் புகார் அளிக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவித்தனர் இந்நிலையில் மீண்டும் ஜூலை 3 ம் தேதி கோவில் வரி பணம் பிரித்து வழங்குவதில் அதே முருகேசன், சுப்பிரமணி, சிகாமணி, ஆகியோர் மீண்டும் முறை கேட்டில் ஈடுபட்டுள்ளனர் இதனால் அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் கோவில் வரி செலுத்திய சந்தா பணத்தை முறையாக அனைவருக்கும் சமமாக பிரித்து வழங்க வேண்டும் என கேட்டுள்ளனர் இதற்கு நீங்கள் கேட்கும் படி எல்லாம் வரிப்பணத்தை பிரித்து தர முடியாது நாங்கள் கொடுக்கும் பணத்தை நீங்கள் வாங்கிச் செல்ல வேண்டும் என அப்பகுதியைச் சேர்ந்த முருகேசன், சுப்பிரமணி, சிகாமணி, வைரம்,செல்வராணி ஆகியோர் ஒன்றிணைந்து அப்பகுதியில் உள்ள பெண்களை தரக்குறைவான வார்த்தைகள் மற்றும் ஆபாச வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விட்டு தாக்கம் முயற்சி செய்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்கள் பெரியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை இரவு முற்றுகையிட்டு பெண்களை தரக்குறைவான பேசிய நபர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர் மேலும் பெண்களை தரக்குறைவானாக பேசிய ஐந்து நபர்கள் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் பல்வேறு கட்ட போராட்டத்தில் ஈடுபடுவோம் என ஊர் பொதுமக்கள் தெரி வித்துள்ளனர் பெரியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை 50க்கும் மேற்பட்ட பெண்கள் முற்றிய இட்டதால் காவல் நிலையத்தில் சிறிது நேரம் சூழ்நிலை காணப்பட்டது மேலும் காவல்துறையினர் கூறிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் கிராமம் முழுவதும் ஒன்றிணைந்து பல்வேறு கட்ட போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்துள்ளனர்

# திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா



திருப்பத்தூர்

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தமிழக வெற்றி கழகம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருப்பதி இன்று திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியின் வாழ்த்து தெரிவிக்க வந்த தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தமிழக வெற்றி கழக இளைஞர்கள் பூவரசன். லவின். பங்கேஷ் .குனிச்சி மோட்டூர் தமிழக வெற்றிக் கழக இளைஞர்கள் வீரமணி .சக்தி அஜித். ஆகியோர் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தமிழக வெற்றி கழகம் திருப்பதி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தி வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்

# பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சபரி ஐங்கரன் சந்திப்பு



பெரியகுளம்

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்.சபரி ஐங்கரன் அவர்களுடன் தேவதானப்பட்டி இஸ்லாமிய இளைஞர் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் சந்திப்பு தேவதானப்பட்டி மேம்படுத்த மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை வைத்து இன்று காலை சட்டமன்ற அலுவலகத்தில் தேவதானப்பட்டி இஸ்லாமிய இளைஞர் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் ஷேக் அப்துல்லாஹ், ஹைதர் அலி, முகமது அஷார் தீன், வாஜித், சதாம் உசேன், சல்மான் கான், ஆஷிக், ஆரிப், சாதிக், தவ்பிக், ஷாஜகான், ஆகியோர் சந்தித்து மனு அளிக்கப்பட்டது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விரைவாக செய்து தரப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளார்

# வேலூர் ஊராட்சி ஒன்றியம் வெங்கடாபுரம் ஊராட்சியில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம்





வேலூர்

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வேலூர் ஊராட்சி ஒன்றியம் வெங்கடாபுரம் ஊராட்சியில் நேற்று நடைப்பெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் லீலா அலக்ஸ் இ.ஆ.ப. தலைமையில் சுற்றுச்சூழல் நில உறுதிமொழியை அணைவரும் எடுத்துக் கொண்டனர் இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா. மகளிர் திட்ட இயக்குநர் பாலமுருகன், வேலூர் ஒன்றியக்குழுத்தலைவர் அமுதா ஞானசேகான் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் பாபு, உதவி இயக்குநர் ஊராட்சிகள்) திருமால், வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பட்சதீஷ்குமார் வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பாபு, துணைத்தலைவர் பார்த்திபன். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பா.சதீஷ்குமார். திருமலை, ஊராட்சி

# அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டத்தில் ஆட்சியர் கலந்து கொண்டு உரை





அரியலூர்

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், வாலாஜாநகரம் ஊராட்சியில் "உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி" நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி கலந்துகொண்டார். முன்னதாக வாலாஜாநகரம் பகுதியில் சுற்றுச்சூழல் தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நெகிழி கழிவுகளை அகற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு அரசு உத்தரவின்படி, ஊராட்சிகளில் ஜனவரி 26 குடியரசு தினம், மார்ச் 22 உலக தண்ணீர் தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம், அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி, நவம்பர் 1 உள்ளாட்சி தினம் என ஆண்டிற்கு 6 முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் உலக சுற்றுச்சுழல் தினத்தினை முன்னிட்டு சிறப்பு கிராம சபைக்கூட்டம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 ஊராட்சிகளிலும் நடைபெற்றது. இதில், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், வாலாஜாநகரம் கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்துகொண்டார்.இக்கூட்டத்தில் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மையில் ஈடுபடும் உறுப்பினர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல். திடக்கழிவு மேலாண்மை குறித்த செயல்பாட்டினை கிராம ஊராட்சிகள் சுயமாக மதிப்பீடு செய்வதற்கும் சரிபார்ப்பதற்கும் வழிவகை செய்தல். "சுற்றுச் சூழலுக்கான வாழ்க்கை முறை" கருப்பொருள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி நிலையான நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த முறையான செயல்பாடு மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதற்கும், சம்பூர்ண ஸ்வச்சதா மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்கள் மீதான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதற்கு சமூகங்களை ஒன்றிணைத்தல் மற்றும் இதர பொருட்கள் குறித்து மாவட்ட ஆடசித்தலைவர் அவர்கள் தலைமையில் விவாதிக்கப்பட்டது. மேலும், சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். தூய்மை பணிகளை தொடர்ந்து சிறப்பாக மேற்கொள்வதன் மூலம் சுகாதாரமான வாழ்விடத்தை உருவாக்க முடியும். பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்து, குப்பைகளை முறையாக பிரித்து ஒப்படைக்க வேண்டும். தூய்மை பணியாளர்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பான சேவைக்கு பொதுமக்ள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) செந்தில், அரியலூர் வட்டாட்சியர் தேவகி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

# காட்பாடியில் குட்கா கடத்திய நபர் கைது 10.5 கிலோ குட்கா பொருள் பறிமுதல்



காட்பாடி

வேலூர் மாவட்டம் காட்பாடி கிறிஸ்டியான்பேட்டை சோதனைச் சாவடி அருகே காட்பாடி காவல் நிலைய போலீஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் வந்த நபரை நிறுத்தி விசாரித்தனர். அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதால் அவரது உடமைகளை போலீஸார் சோதனை யிட்டனர். அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 'ஹான்ஸ்' மற்றும் 'கூல் லிப்' ஆகிய புகையிலைப் பொருட்கள் விற்பனைக்காகக் கடத்தி வரப்பட்டது தெரியவந்தது. அவரிடமிருந்து மொத்தம் 10.5 கிலோ எடையுள்ள குட்கா பொருட்களை (270 ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் 270 கூல் லிப் பாக்கெட்டுகள்) போலீஸார் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து கடத்தலில் ஈடுபட்ட திருவள்ளூர் மாவட்டம், ஆழ்வார் திருநகர், இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்த பழனி (வயது 53) என்பவர் மீது காட்பாடி போலீஸார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வந்தனா கார்க், இஆப. அவர்கள் இன்று (05.06.2026) திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள சமையல் கூடத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.


## பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில்

# அதிக மதிப்பெண் பெற்ற மாணவிக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி ராஜகுலத்தோர் வட்டார சங்கம் பாராட்டு



தேனி

தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை பிஆர்பி நாயுடு தெருவை சேர்ந்த முத்துக்குமார் நாகஜோதி தம்பதியரின் மகள் மதுமிதா இவர் பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறா இந்நிலையில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவி மதுமிதா 420 மதிப்பெண் பெற்றுள்ளார் இதனைத் தொடர்ந்து அதிக மதிப்பெண் பெற்ற மாணவியின் பாராட்டும் விதமாக பெரியகுளம் ராஜகுலத்தோர் வட்டார சங்கம் சார்பாக மாணவி மதுமிதாவுக்கு பொன்னாடை போற்றி நினைவு பரிசு வழங்கி கௌரவப்படுத்தி நிர்வாகிகள் பாராட்டுகளை தெரிவித்தனர் மேலும் மாணவி அதேபோல் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று மருத்துவ படிப்புக்கு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் நமது சங்கத்தின் பெருமைகளை கௌரவப்படுத்த வேண்டும் எனவும் மாணவிக்கு சங்க நிர்வாகிகள் அறிவுரை கூறினார் இந்த விழாவில் சங்கத் தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.வ.காந்திராஜ் அவர்களை இராணிப்பேட்டை சுற்றுலா மாளிகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் .ந.ப்ரியா, பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

## மின்சாரத்துறையின் அலட்சியத்தால் மாப்படுகை பகுதியில்

# வீடு தீ விபத்து நேரில் சென்று ஆறுதல் கூறி நிவாரண உதவி வழங்கிய தவெகவினர்



மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டம் மாப்படுகை அண்ணா சாலை அருகே அண்ணா நகரில் ஹரி,நந்தினி இவர்கள் வீட்டில் இருந்த பொழுது மின் கசிவு ஏற்பட்டு திடீரென வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது இந்நிலையில் வீடு முழுவதும் தீப்பற்றி எரிய வீட்டில் இருந்து வெளியில் ஓடி வந்து உயிர் தப்பியுள்ளனர் இருப்பினும் வீட்டிலிருந்த அனைத்து பொருட்களும் மின்சாதன பொருட்கள் அத்தியாவசிய பொருட்கள் சைக்கிள் உட்பட அனைத்து பொருட்களும் தீயில் எரிந்து கருகி நாசமானது இந்நிலையில் தகவல் அறிந்து தமிழக வெற்றிக்கழக மாவட்ட கழக செயலாளர் சி.எஸ் கோபிநாத் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை தெற்கு ஒன்றிய செயலாளர் ஜி. நிரைப்பாண்டி நேரில் சென்று தீ விபத்தில் சேதமடைந்த வீட்டை நேரில் பார்வையிட்டு உடனே மாவட்ட கழக செயலாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பாதிக்கப்பட்ட ஹரி,நந்தினி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி பின்னர் மாவட்ட செயலாளர் சி.எஸ். கோபிநாத், மயிலாடுதுறை தெற்கு ஒன்றிய செயலாளர் ஜி. நிரைப்பாண்டி ஆகியோர் அவரது குடும்பத்திற்கு நிவாரண உதவிகளை வழங்கினர்.மேலும் வீட்டை சீரமைக்க தாங்கள் உதவுவதாக தமிழக வெற்றி கழகத்தினர் கூறியுள்ளனர் இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி கார்த்திக், சந்துரு, மோகன்ராஜ், தங்கப்பன், புவனேஸ்வரி, சிந்துஜா,அ ப்பு மாதேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.இந்த தீ விபத்திற்கு மின்சார துறையே காரணம் என அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். நீண்ட நாளாக பழுதடைந்த மின் கம்பிகளை சீரமைத்து தருவதாக கூறி அப்பகுதி லைன் மேன் சரி செய்யாததே இந்த தீ விபத்துக்கு காரணம் என குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor:S.V.KANI RAJA. CALL: 044-22772060,9443699066